1987 ஏப்ரல் 11]

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற போது ஆங்காங்கே சிமெண்ட் பேக்டரிகளை உருவாக்குவது சாத்தியமல்ல என்று சொன்னார்கள். தூரமாக இருக்கிற பேக்டரிகளுக்கு சுண்ணாம்புக் கல்லை எடுத்துச் சென்றால் லாரிகளின் வாடகையே அதைச் சாப்பிட்டு விடும். எனவே, அந்த வகையில் அரூருக்கும் தண்டராம்பட்டுக்கும் மத்தியிலே மாட்டுப்பல் என்ற பகுதியில் 100 ஏக்கர்களுக்குச் சுண்ணாம்பு இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். காரணம் அந்த அரூர் பகுதியிலே அவர்கள் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள். எனவே, மினி சிமெண்ட் பேக்டரி என்ற அடிப்படையில், ஆங்காங்கு சுண்ணாம்புக் கல் இருக்கிற பகுதிகளில் மினி சுண்ணாம்பு ஆலை அமைக்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? இனிமேலாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது அப்படித் திட்டம் இல்லை.

உசிலம்பட்டி தொகுதியில் குடிநீர் வழங்கல்.

388—(* வினா எண் 8693) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதியில் நிலவி வரும் வறட்சியின் காரணமாக குடிநீர் வழங்கலை அதிகரிக்க அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை* அவை முன் வைக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே "செல்லம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 8 குடியிருப்புகளிலும் நடப்பாண்டில் கையிறைப்பான்கள் அமைக்கப்பட உள்ளன. இவை தவிர,

* 548 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

உசிலம்பட்டி ஒன்றியத்தில் 14 குடியிருப்புகளிலும் செல்லம்பட்டி ஒன்றியத்தில் 8 குடியிருப்புகளிலும் பொய்த்துப்போன கிணறு களுக்குப் பதிலாக மாற்று ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பெற உள்ளன. உசிலம்பட்டி ஒன்றியத்தில் 5 கிராமங்களிலும் செல்லம்பட்டி ஒன்றியத்தில் 2 குடியிருப்புகளிலும் நீராதாரங் களைக் கண்டறியும் பணி முடிவுற்றதும், கையிறைப்பான்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்" என்று இனி எடுத்துக் கொள்ளப்பட இருக்கிற பணிகளைப் பற்றிய விவரங்கள்தான் இருக்கின்றன. நான் உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, மதுரை மாவட்டத்திலே, திருமங்கலம், சேடப்பட்டி உசிலம்பட்டி ஆகிய தொகுதிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்ற காரணத்தாலே, அந்த வேலைகளை இன்னும் போர்க்கால அடிப்படையிலே முடுக்கிவிட்டு அதிகமான கையிறைப்பான்களை போட இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற் போது போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதிக்குத் தண்ணீர் தருகின்ற வில்லியம்பாக்கம் பகுதியிலே கடந்த 10 நாட்களாக மின் அழுத்தம் காரணமாக, தாம்பரத்திற்குத் தண்ணீர் வருவதில்லை. அதேபோல ஆலந்தூர், பல்லவபுரம் நகரங்களுக்குத் திடீரென்று ஏற்பட்ட மின் அழுத்தம் காரணமாக தண்ணீர் வராத காரணத்தால், தயவுசெய்து அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த இடங்களுக்கு ஜெனரேட்டர் கொடுப்பதற்கு, பொதுவான கருத்தாக தமிழகம் பூராவும் வைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தமிழகம் பூராவும் ஜெனரேட்டர் பொருத்துவது என்பது இயலாத காரியம். நேற்றுகூட சென்னையிலே மின் அழுத்தத்தின் காரணமாக ஒரு பகுதிக்குத் தண்ணீர் போக முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அதற்குப் பிறகு ஜெனரேட்டர் எல்லாம் கொண்டு போய் போட்டு தண்ணீரைத் தந்திருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளிலும் ஜெனரேட்டர் பொருத்துவது என்பது தற்போது இயலாத காரியம்.